பதிவு எண்—M 5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள

468

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை-6 குருகுலம், மாம்பாக்கம்; விசய, தை; 22—1—54 தளிர்-14

13 FEB 1954

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெளிவுரை

## தக்கார் யார்?

யாவரை இவ்வுலகத்தில் தக்கார் என்பது? ஆசிரியர் அதற்கு ஓர் அடையாளம் குறிக்கின்றார்.

நடுநிலை வழுவாத நல்லோர், தமக்கு ஒரு மாதிரி பிறர்க்கு ஒரு மாதிரி என்ற ஓரவஞ்சகத்தோடும், உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் காவேரடும், பேசுதல் ஒன்று நடத்தல் வேறொன்றாகிய வஞ்சனையோடும் ஒழுகுவாரல்லர்.

தமக்கு நன்மையே வரினும் அல்லது இடுக்கணே வரினும் கடமைகளை ஒழுங்காகச் செய்து முடிக்கும் அறத் திரு படைத்தவர் அவர்! அத்தகைய மெய் வீறு என்னும் அறவீரப் பண்பையே ஆசிரியர் 'தகுதி' என மதித்தார்.

அத் தகுதியுணர்ச்சிதான் எவ்வளவு போாற்றல் படைத்தது உலகத்தில்! அத் தகு நடுநிலையாளர் உலகியலில் நுழைந்து செல்வங்கள் தேடிக் கையாண்டு, அதாவது பயன்செய்து, எச்சமாய் வைத்துச் செல்லுங்கால், அவ் வெச்சப் பொருள்கள் எவ்வளவு உணர்ச்சியாற்றல் பதிந்தனவாயிருக்கும்! அவற்றைப் பின் வருவோர் கையாள முற்படும்போது, அத் தகுதியுணர்ச்சி, அவரிடத்தும் எவ்வளவு உறுத்தலாய் உறைத்துப் பதியும்! அவ்வாறு அவ்வுணர்ச்சி எறிப் பதிவு பெற்றோர், தங் காலத்தில் எவ்வளவு நல்லவராய்த் திருந்தித் தகுதி யுணர்ச்சியாள ராவர்! தமக்குத் தகுதி தந்து வளர்க்கும் அப் பொருள்களை அவரெல்லாரும் எவ்வளவு கருத்துடன் போற்றி வருவர்! அதனால் அப் பொருள்களும் தீங்கிற் சிறிதும் வீணாகாமல் நன்மைக்கே நாளும் பயன்பட்டு எவ்வளவு பெருகி வரும்! அழியா நிலையன்றோ, அப் பொருள்களுக்கும் அப் பொருளுடையார்க்கும் உண்டாய்விடுகின்றது!

அது மட்டுமோ, அப் பொருளை வைத்த பெரியோர்க்கு, 'நடுநிலையாளர்' என்னும் அழியாப் பெரும் புகழையுமன்றோ நாளும் வளர்த்து வர அது காரணமாயிருக்கின்றது!

தக்கார் தகவிலர் என்பது
அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

தக்கார் தகவிலர் என்பது—நடுவு நிலைமை என்னும் தகுதியுடையார் இவர் என்பதும் அத் தகுதியில்லாதவர் இவர் என்பதும், அவரவர் எச்சத்தால் காணப்படும்—அவர் காலத்திற்குப் பின் எஞ்சி நிற்கும் அவர் பொருள்களால் தெளியப்படும்.

எச்சம்—எஞ்சி நிற்பது; அது பொருள் முதலிய எல்லாவற்றிற்கும் பொருந்தும்; மக்களுக்கும் பொருந்தும்.

எச்சம் என்றதனால் 'அவர் காலத்திற்குப் பின்' என்பது கொள்ளப்பட்டது.

வாழ் நாள் வரையிலும் செல்வம் முதலியன பெருகிக் கொண்டே வருவதும், புகழுக்காகவும் தன் நலத்திற்காகவும் அறம்இயற்றிக்கொண்டே வருவதும் உண்டாதலின், பிற்காலத்திலேயே அவரது உண்மை நிலை நன்கு புலப்படும் என்றற்கு 'எச்சத்தாற் காணப்படும்' என்றார்.

நடுநிலைமையுடன் நடந்துகொள்வோர்பொருள்கள், அழியாது நீடு நின்று, எக் காலத்திலும் பிறர்க்கும் நடுநிலையுணர்ச்சி பெருக்கி நன்மை செய்விக்குமாதலின், இவ்வாறு கூறினார்.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
**6-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(23-10-53 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| கிளை | விசய, தை, | தளிர் |
|---|---|---|
| 6 | 22-1-54 வெள்ளி | 14 |


# அறக்கூழா? பொறைக் கழிவா?

அண்மையில் தைப்பூசம் போந்தது. வழக்கம்போல் வடலூர்ப் பெரு வெளியில் வள்ளலார் வகுத்த வழியில் செல்வதாக எண்ணிக்கொண்டு வந்து குழுமி, முந்தி உண்டு. சிந்தை மகிழ்ந்து சென்றோர் எண்ணிறந்தோர் ஆவர்.

ஆனால் எத்தனைப் பேர் அவ் வெளியில் விளைந்த-வள்ளலாரால் விளைவிக்கப்பட்ட, உயர் ஞான ஒளியில் திளைத்து உண்மை நெறி உணர்ந்து போந்தவர்?...உணர விழைவார்க்கு ஏற்ற சூழ்நிலையேனும் அங்கே இப்போது இருக்கிறதா? உண்டாக்கப்படுகிறதா?

வடலூரில் தைப்பூசந்தோறும் பல அன்பர்கள் செல்வர்கள் எண்ணற்ற மக்களுக்குச் சோறு வழங்குகிறார்கள். வழங்க வேண்டுவதுதான்; ஏன் வழங்க வேண்டும்? எப்படி வழங்க வேண்டும்? இதை எண்ணிப் பார்த்தவர்கள் உண்டா?

வள்ளலார் ஆங்கே அறச்சாலை மட்டும் அமைத்து அது மட்டும் எப்போதும் புகைந்துகொண்டிருக்கவேண்டும் என்று சொல்லவில்லை; வேத பாடசாலையையும் ஒளிக்கோயிலையுங் கூட அமைத்திருக்கிறார். அவற்றில் பயின்று படிந்துநிற்க வருவார்க்கும் அறச்சாலையில் சிறப்பான முறையில் உணவு சமைக்கப்பட வேண்டும் என்பதும் அவர் விருப்பம்.

ஞானக் கேள்விக்கும், சோதிக் காட்சிக்கும் உணவின்மை ஒரு தடையாயிருக்கக் கூடாது என்பதே எண்ணம்.

சோறு வழங்குபவர்கள் பலரும் தனித் தனியே தமக்கென இடம் வகுத்துக்கொண்டு தமக்குத் தோற்றியபடி எல்லாம் வழங்குகிறார்கள். அடிகளார் அமைத்த அறச்சாலைச் சோறு சிறப்பாக இருப்பதில்லை. அந்தச் சாலையின் சோற்றை மதித்து அடைய விரும்பும் தக்கோர்க்கு அது தக்கபடி வழங்கப்படுவதுமில்லை. பிற இடங்களில் எவ்வளவுதான் சிறப்பாக வழங்கப்பட்டாலும் அடிகளார் அமைத்த அறச்சாலையில் வழங்கப்படுவதற்குள்ள சிறப்பு அவற்றிற்கு வருமா?

எனவே, சோறு வழங்குபவர்களை எல்லாம் ஒன்று கூட்டித் தனித் தனியே வழங்காதபடி செய்து எல்லார் பொருளையும் அடிகளார் அறச்சாலையிலேயே சேர்க்கச் செய்து, தக்க இடங்களைப் பக்கங்களில் அமைத்து அவற்றில் அவர்களைப் பணி செய்யும்படி கேட்டு, அவ்விடத்திய உயர் நிலைக்குத் தக்க, தொழுகை, ஞானக்கேள்வி முதலியவற்றிற்கு ஒன்றுபட்டு ஏற்பாடுகளைச் செய்து அவற்றில் ஒழுங்காக ஈடுபடுவோர்க்கு உணவு தருவது என்னும் நிலையை உண்டாக்க வேண்டும்.

இவ்வளவையும் எல்லாரும் ஒன்றுபட்டுச்செய்யாமல் அங்கே சென்று அவரவர்களும் தமக்குத் தோற்றியபடியெல்லாம் செய்கின்ற எவையும்போற்றத்தக்கனவாகா; அங்கே வழங்கும் சோறும் "அறக் கூழா"காமல் "அவரவர்கள்" தம் பாவமூட்டைகளைக் கழிக்கச் செய்யும் "பொறைக் கழி"வாகவே ஆகும்.

—ஒளி.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தித் தான் அறிவு பெறவேண்டியவன் என்ற எண்ணம் அற்றுப்போனமையால். இம்மாதிரி உணர்ச்சிகளுக்கும் அறிவுரைகளுக்கும் போராட்டம் வரும் நிலைதான் இரண்டுங் கெட்டான் நிலைமையாகிறது. பின் இப்போராட்டம் வாராமல் தடுக்கச் சிறிது மிகுதியான பொருள் இருந்திருந்தால் முதல் உதாரணத்து வாலிபன் தன் உணர்ச்சிக்கு முறையீடு செய்துகொண்டு, பின் வரும் இக்கட்டையும் தாங்கிச் சமாளித்துக் கொண்டு, மனப்போராட்டமற்றுச் சென்றிருக்கலாம். எனவே, இந்த நிலைமைக்குக் காரணம் வறுமையாகியது. வறுமையின்றேல், சிலர்-புலனடக்கமுள்ளவர்கள்-முன்னேறலாம்.

# 'மனப்போராட்டம்'

'நா'

பரந்த நோக்கும் சிறந்த அனுபவ அறிவும் உடைய அதஞர் பெருமக்கள் . நம்நாட்டில் மிகமிகச் சிலரே. இவர்கட்கு மாறாக அறியாமையில் மூழ்கி அவதிப்பட்டுழலும் மக்கள் இவர்களைவிடச் சற்று எண்ணிக்கையில் மிகுதியே. ஆனால் இரண்டுமற்ற நிலையில் இருக்கும் மனிதர்களோ பெரும்பாலோர்; காற்றுச் சுழற்சியற்ற அமைதியான இடத்தில் அணையாச் சோதியாய்ச் சுடர்விட்டு மின்னும் விளக்குக் கொப்பர் முதலவர். சுடர் குன்றி மங்கிமாயும் தறுவாயில் நிற்கும் பயங்கர நிலைவுக்குப் பின்னெழும் பரிதாபத்திற்கு உரியவர் மூன்றாமவர். ஆனால் இரண்டாமவரோ காற்றினால் சுழற்றிச் சுழற்றி அடிக்கப்பட்டு ஒரு சமயம் கொழுந்துவிட்டு எழுவதும், மறுசமயம் மங்குவதுமாக இரண்டுங் கெட்டான் நிலையிலகப்பட்டுத் திண்டாடுவதற்கொப்பர். ஏனெனில் இஃது இம் மூவரின் மன இயலைப் பற்றியதே யன்றிப் பிறிதொன்றில்லை. அமைதியும், அன்பும் கொண்டு அல்லலற்ற வாழ்க்கையில் ஒருசிலர்தான் வாழ முடிகிறது. ஏன் இந்த நிலை? இதற்குக் காரணங் காண்பார் வெகுசிலர் காரணத்தையறிந்து காரியத்தில் திருத்தம் செய்துகொள்ள முடியாத நிலையில் அகப்பட்டுத் திண்டாடுவார் மிகப்பலர். அவர்கள் திண்டாட்டத்திற்கும் இருவித காரணங் கூறலாம். முதலாவது மன அடக்கம். அதாவது புலன் கட்டுப்பாடற்று நிதானந் தவறினமை. இரண்டாவது வறுமை. இந்த இரு காரணங்களும் வெவ்வேறு தன்மையுடையவர்களிடமே காணப்படும். முதலாவது தன்னைப் பற்றித் தானே அறிந்து திருத்திக் கொள்ள முடியாமலோ, அல்லது பிறர் திருத்தத் திருந்தாமலோ, இருப்பாருடையது; இரண்டாவது தான் முன்னேற வேண்டும் என்ற அவாவினால் உந்தப் பெற்றுப் புலன் வெற்றி காண விழைவாது. இதை ஒரு உதாரணம் மூலம் அறிவோம்

கட்டுடல் வாலிபன் ஒருவன் தன் கையில் சிறிது நாணயம் வைத்திருந்தான். அவன் வறுமையில் அடி பட்டவனாகையால் இந்தக் காசை இன்னும் நான்கு நாள் கழித்து வரப்போகும் ஒரு அவசரக் காரியத்தை முன்னிட்டு அதைச் செலவழிக்காமல் வைத்திருந்தான். வரப்போவதை அறிந்து அதற்கேற்ப வாழ வழி வகுப்பார் ஒரு சிலர்; அவ் வாலிபனோ உணர்ச்சிகள் குவித்து வைக்கப்பட்ட மன இயல்பினன். பரந்த உலகின் இயற்கை வனப்பில் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டு நிற்பவன். அப்படிப்பட்டவனுக்குக் குறுகிய மனப்பான்மையோ, அல்லது புகைந்தெழும் உணர்ச்சிகளைப் பொசுக்கித் தள்ளி வாழ்வதென்பதோ இயலாவன்றோ? இந்த நிலையில் அவனுக்குப் பிடித்தமான ஒரு படக்காட்சியும் அவன் இருக்கும் இடத்திற் கருகில் திரையிடப்படுகிறது. இப்பொழுது அவன் காசைச் செலவழித்து உணர்ச்சிக்கு முறையீடு செய்துகொள்வானோ? அன்றி, பின்னால் வரும் இக்கட்டுக்குச் சிக்கனத்தைக் கையாள்வானோ?

முதலாவதைவிடப் பின்னால் வரும் இக்கட்டைத் தவிர்த்து வாழ்வதுதான் சிறந்ததென்று பலரும் கூறலாம். ஆனால் அவன் வாழ்வில் உயிர் ததும்பச் செய்யும், சுவை தந்து இன்பமளிக்கும், உணர்ச்சிகள் சிதைக்கப்பட்டால் அதனால் அவன் மன இயல் அடிப்படையில் கலக்கம் ஏற்பட்டு அதனாலும் விபரீதங்கள் எழலாம். அல்லது, இப்படி, ஒவ்வொன்றும் சிதைக்கப்பட்டுக் கொண்டே வந்தால் அவன் போக்கே மாறி, சாதாரண மனித நிலைக்குத் தாழ்ந்தவனாகவும் போய்விடலாம். எனவே, உறுத்தெழும் உணர்ச்சிக்கு நன்முறையில் முறையீடு செய்து கொள்ளுதலே நன்றெனலாம். ஆனால், பின்னால் வரும் இக்கட்டுக் கேற்பப் பரிகாரத்தைத் தேடிக் கொள்ளாது அவ்வப்பொழுது தூண்டுதலுக்கேற்பத் துலங்கிக் கொண்டே வந்தால் அது மனித வாழ்க்கையல்லவே. மிருகங்கள் வாழ்வு அன்றோ அது! மேலும் அறிவுடையார் செயலும் அஃதல்லவே! சிறந்த வாழ்க்கைக்கும் வாழ்வில் மிகுதியும் துன்பங்களைக் குறைப்பதற்கும் பின்னால் வருவதையறிந்து முன்னால் ஆயத்தம் செய்து கொள்ளலே நன்று.

இன்னோரன்ன காரணங்களால் இரண்டாவதே சிறந்ததென்னலாம். இஃதிவ்வாறிருக்க இன்றைய உலகில் நம் நாட்டைப் பொறுத்த வரையில் உணர்ச்சிகளை ஓடவிட்டுப் பார்க்கும் வாலிபர் கூட்டமே ஏராளம். அது நன்மையின்பாற் பட்டதோ, தீமையின்பாற் பட்டதோவெனில், பெரும்பாலும் நன்மையென்று சொல்ல முடியாது. உதாரணமாக, ஒரு வாலிபன் கல்லூரி பயிலுகின்றவன். புகை குடிப்பதும் மிகுதியான படக்காட்சி பார்ப்பதும், காதல் வசப்படுவதும் எதனால்? அவன்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

# மொழித் துறை

## * ஈரடி இருநூறு *

நூலாசிரியர் – திரு சே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.
(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

### அதிகாரம் 14.

### நாட்டன்பு

இனி மனம் இயல்பாகச் சென்று தாவும் உலகியல் கூறத் தொடங்கி அவ்வாறு இயல்பிற் றுவுதலில் ஆண்டும் அதற்கு நன்னெறி புலப்படுத்தி உய்வு தேற்றுதற் பொருட்டு உலகைப் பயன்படுத்தும் இன் முறைகள் கூறுவார், முதற்கண் 'நாட்டன்பு' கூறினார்.

1. நாட்டின் நலம்விழையின்
நாடுக நாட்டன்பு,
தேட்டுள் அதுவே தலை.

ஒருவன் தன் நாட்டின் நலத்தை விரும்பினல் நாட்டன்பினை விரும்புக; அவன் தேடுஞ் செல்வங்களுள் அதுவே சிறந்தது.

தன் நாட்டின் நலத்தால் தனக்கும் நலமுண்டாதலானும், நாடு நலமில்லாததாயின் தனது வளமும் நிலையாதாய் நன்கு பயன்படாது வீணுதலானும் 'நாட்டன்பு தேட்டுள் தலை' என்றார். நாட்டன்பு நாட்டின் பால் அன்பு. ஏகாரம் பிரிநிலை. இதனல் நாட்டன்பது சிறப்பும் இன்றியமையாமையும் கூறினார்.

2. யாதுந் தன் நாடாக
யாவருந்தன் கேளிராய்க்
கோதிலா அன்பே கொளும்.

பழுதில்லாத நாட்டன்பு, எந் நாட்டையுந் தன் நாடாகவும் எந் நாட்டு மக்களையுந் தன் உறவினராகவுங் கொண்டு நிகழும்.

கேளிராக வென்பது கேளிரா யெனத் திரிந்து நின்றது. அன்பென்பது நல்லியல்பாகலானும், தொடர்புடையார்மாட் டன்றிப் பிறர்மாட்டும் விருப்பமுடைமையைத் தந்து அவ்விருப்பமுடைமை நண்பென்னும் நாடாச் சிறப்பினைத் தருதற் கேதுவாகலானுப், யாண்டும் நட்பன்றிப் பகைவிளைத்தல் அன்பின் இயல்பாகாமையானும் இவ்வாறு கூறினார். அன்புடையார் என்பும் பிறர்க்குரியராகலின் தன்னல மென்னும் பழுது நிகழாததே அன்பென்றுணரப்படுதலின் அப் பழுது நிகழாமை நினைவுறுத்துதற்குக் 'கோதிலா அன்' பென்றார். தன் நாட்டின் கண் அன்பென்றதனல் அவ்வன்பு தன்னலமுடையதாகா தென்றபடி. முன்னைச் செய்யுளிற் கூறிய நாட்டன்பு எனை நாடுகட்கும் நலமே விளைக்கு மென்பது இதனுற் கூறப்பட்டது.

3. நாடெனில் பொங்கும்
நனிதுடிக்கும் நைந்தெழூஉம்
தேடி மனம்செய்வ தில்.

தன் நாடு என்று நினைந்தவளவில் நன்மனம் அன்பு பொங்கும்; தொண்டுக்கு மிக விரையும்; செயலூறும்; இவ்வாறு இயல்பானன்றிச் செயற்கையாக நாட்டன்பு தேடி மனம் செய்யத்தக்கது யாதுமில்லை.

கூறுவது மனத்தையாகலின் 'எனில்' என்பதற்கு, 'என்று நினைந்தவளவில்' என்றுரைக்கப்பட்டது. தேடுதலில் தன்னலமுண்டாகலானும் ஆற்றலாய் நிகழாமையானும் அது கடியப்பட்டது.

4. கொடுமையும்
கொல்படையும்
கூடிப்போர் கொள்ளின்
நடுங்குமோ நாட்டிற்காம் அன்பு.

அயல் நாட்டவரின் அடக்கு முறை முதலிய கொடுமைகளும் அவருடைய கொல்லும் படைகளும் ஒருங்கு சேர்ந்து போர் செய்யினும் தன் நாட்டிற்காக நிகழும் அன்பு அவற்றிற்கு அஞ்சிப் பின் வாங்குமோ?

அஞ்சா தென்பதாம். சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. இவை இரண்டு பாட்டானும்

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros;
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

நாட்டன்பு தன் நாட் டுரிமை காத்தற்கண் மூறுகி நிற்குமாறு கூறப்பட்டது.

5. தன் பொருள் மக்கள்
தனதாவி தன்னவாம்
தன்னுடு வேண்டா தெனின்.

அன்பில்லாமையால் ஒருவன் மனம் தனது நாட்டை விரும்பா தாயின் மட்டுமே அவன் செல்வம் அவன் மக்கள் அவன் உயிர் அவனுடையனவாகும்.

மற்று, நாட்டன்புடையார்க்கோ அவை அனைத்தும் நாட்டிற்குரியவாம் என்றபடி. நாட்டன்பு என்பதிற் சிறிதும் தன்னலமின்மை இச் செய்யுளாற் புலப்படுத்தப்பட்டது.

6. ஆற்றல் அளக்குங்கோல்
அன்பின்றி மற்றில்லை
நாட்டிற்காம் நல்ல அரண்.

ஒரு நாட்டின் வலிமையை அளக்கும் அளவுகோல் அந்நாட்டு மக்களின் நாட்டன்பல்லது வேறில்லை; அவ்வன்பே அந்நாட்டிற்குச் சிறந்த அரணாகும்.

மக்கள் காட்டும் நாட்டன்பல்லது ஒரு நாட்டிற்கு அதன் நிறைசெல்வம், பெருபடை, உயரரசு, வல்லரண் முதலியவெல்லாம் வலிமையின் அடையாளமாகா என்றற்கு 'மற்றில்லை' என்றார். வளைய குறைந்துழியும் நாட்டன்பு சிறந்து நிற்குமேல் பகைவர் அந்நாட்டின்கண் நுழைய மாட்டுவாரல்லரென்பார், அவ்வன்பே 'நல்ல அரண்' என்றார். நாட்டுக்கு வலிமை இன்னதென்பது இதனாற் கூறினார்.

7. பல்லோர் பகையினும்
பொல்லாதே நல்லோன்போல்
அல்லன செய்வான்றன் அன்பு.

அறநெறியானைப் போல் நடித்து அறமல்லாத செயல்களைச் செய்யும் ஒருவனது நாட்டன்பு, அயல் நாட்டார் பலர் பகையினும் பெருந்தீங்கு பயப்பதாம்.

பல்லோர் பல நாட்டுப் பகைவரெனினும் ஒக்கும். புறத்தே நாட்டன்பு காட்டி அகத்தே தன்னலத் திட்டங்களிற் றொழுகுவார், இதனாற் சுடியப்பட்டனர்.

8. தீயோர் ஒளிக்குந்
திரையன்று நாட்டன்பு
தீயோரை நீங்குந் திரு.

நாட்டன்பாவது அறநெறி பிறழுங்கொடியோரைத் தன்னுள் மறைத்து வைக்குந் திரையன்று; அஃதவரை விட்டுநீங்கும் வீற்றுத் தெய்வமென்க.

வீறு படைத்ததாகலானும், வளம் பெருக்குங் காரணமாகலானும் நாட்டன்பு 'திரு' எனப்பட்டது. அத்திருவினை ஒரு திரையாகக் கொண்டு ஒளிந்தொழுகுந் தீயோர், அது நீங்குதலின் மறை புலப்பட்டு நிலைகுலைதல் திண்ணமாதலின், 'ஒளிக்குந் திரையன்று' என்றார். தீயோர் வீறில்லவராகலின் அவரை அது நீங்குமென்க.

9. முள்ளஞ்சிக்
கொள்கனியைய
நீத்தற்றே மூடர்தம்
சொல்லஞ்சிக் கொள்கை விடல்.

நாட்டினுள்ள பேதையரின் முள்போன்ற கொடுஞ் சொற்களுக்கு அஞ்சி நாட்டன்பு மிக்க ஒருவன் தன் கட்சிக் கொள்கையைக் கைவிடுதல், தண்டின் முட்களுக்கு அஞ்சித் தான் கொள்ள வேண்டிய பழத்தைக் கொள்ளாமல் இழத்தலோடு ஒக்கும்.

நீத்து, நீத்தல்; அஞ்சாதும் இடர் கடந்தும் நாட்டிற்காவன செய்தல் நாட்டன்பு என்றபடி.

10. தன்னுயிர் நீப்பினுஞ்
செய்யற்கதன்னாட்டிற்[கு]
இன்னல் விளைக்கும் வினை.

தன் உடலிலிருந்து உயிர் நீங்கிப் போவதாயினும் தன் நாட்டிற்குத் தீங்கு பயக்குஞ் செயலைச் செய்யாதொழிக.

நாட்டு நலத்தின் முன் தன் நலம் பெரிதன்றாதலானும், இன்னல் விளைக்கும் வினை மேன்மேலும் ஊறு பெருக்கித் தன்னலத்திற்கே தீங்கு பயக்குமாதலானும் 'தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க' என்றார். நீப்பினும் என்னும் உம்மை எதிர்மறை; வினை விளைகாலத்தானன்றி நீங்காமையே பெரும்பான்மை என்பதுணர்த்திற்று; பிறண்டும் 'தொண்டர்க்குக் காப்பேன் பிற' என்றாராகலின். இவை நான்கு பாட்டானும் நாட்டன்புக்கும் அரசுக்கும் அறநெறி இன்றியமையாததென்பது கூறப்பட்டது.

Phone. 55034. Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்

ELEPHANT KISAN

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# முப்பதாம் ஆண்டில்

(வெ. சா. எ.)

பத்தாண்டுகளுக்கு முன்னால் சந்திரா கன்னிப்பெண்ணாயிருந்த பொழுது மார்கழி முப்பதும் வைகறையில் நீராடி இறைவன் எதிர் நின்று,

"உன்னைப் பிரானாகப்
பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவரா
ராவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப்
பணி செய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ
னல்குதியேல்
என்ன குறையும் இலோம்"

என்று வேண்டி நோன்பு எடுத்துவந்தாள். இந்நாட்களில், அவள் வேண்டியபடியே ஆண்டவனும் அவளுக்குக் குறைவற்ற செல்வத்தோடு அறிவுள்ள கணவனையும் கொடுத்திருந்தான். அதனால் சந்திரா மற்றவர்களைவிடச் சற்று இறுமாந்தே யிருந்தாள்.

சந்திரா என்றால் அழகில் சந்திரனே எனலாம். சந்திரனின் களங்கத்தைக் கண்டு அவளும் விழிகளிலே மைதீட்டிச் செஞ்சாந்தினாலே பொட்டிட்டுத் தன் மதிவதனத்திலும் மாசு இருப்பதுபோல் காட்டிக்கொண்டாள். இல்லையென்றால், அவளழகிற் சந்திரனையும் ஈடாகச் சொல்ல முடியாது.

பாண்டியன் ஒரு தனி மனிதன்; அதிகப் பணக்காரனுமல்ல; ஆயினும், அவனழகு மக்களை வசீகரித்து அவன் பின் பத்துப் பேர் செல்லும்படியாகச் செய்தது. முப்பத்திரண்டு அழகில் எது குறைவென்று உடற்கூறிலக்கணங் கற்றோர் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்; ஓவியக்காரர்கள் இவன் உருவத்தையே தீட்டி வைத்துக்கொண்டார்கள். கவிகள் தாங்கள் செய்த கற்பனையை இவனிடத்தில் உண்மையாகவே கண்டார்கள்; சிறப்பாகப் பாண்டியன் இளமையும் எழிலுங் கொண்ட முருகனையே ஒத்திருந்தான் எனலாம். பாண்டியன் சந்திராவைப் பெற்றதால் "இல்லாளகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்று பாடி மன அமைதியுடனிருந்தான். சந்திராவும் 'என்ன குறையுமிலோம்' என்று இறைவனைப் பாடிப் போற்றி வந்தாள். இவ்வாறாக இளங் காதலர்கள் இருவருங் கருத்தொருமித்து இல்லறமாகிய சகடத்தைப் பத்தாண்டுகள் ஓட்டி வந்தனர்.

மார்கழி பிறந்தால் பாண்டியனுக்கு முப்பதாம் ஆண்டு தொடங்கப் பெறும். அதுவே பாண்டியன் பிறந்த நாளும் ஆகும். எனவே, சந்திரா வைகறையில் எழுந்து நீராடி நோன்பு நோற்க எண்ணி இரவே யாவற்றையுஞ் சேகரித்து வைத்துவிட்டு மாடியின் மீது சென்று படுத்தாள்; வெள்ளி முளைத்தது; படுத்திருந்த அறைப் பலகணியின் வழியாக வானத்தில் நின்று பார்த்த அவ் விண்மீன் இவள்விழிமீனுக்கு வெட்கி மூடி மூடித் திறந்தது. அடர்ந்த பனி மேகங்கள் இவள் கருங்கூந்தலுக்கு நாணி வெளுத்ததுபோல் காட்சியளித்தன. பிறந்தது மார்கழி என்பதையும் மறந்து சந்திரா ஆழ்ந்த நித்திரையிலிருந்தாள் மணி ஐந்து அடித்துவிட்டது. ஆயினும் சந்திரா எழுந்திருக்கவில்லை. பக்கத்து வீட்டுக் கன்னிப் பெண்கள் "கூற்றத்தின் வாய் விழுந்த கும்பகர்ணனும், தோற்றும் உனக்கே பெருந் துயில்தான் தந்தானோ?" என்று காதலாகிக் கசிந்துருகிப் பண்ணோடு பாடுகின்றது இவள் காதில் பட்டது. ஆயினும் புரண்டு படுத்தாளே யொழிய எழுந்திருக்கவில்லை. எதிர் வீட்டிலுள்ளோர் "சொன்னோங் கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ? என்னே! துயிலின் பரிசு" என்று பாடியது இவள் காதில் பட்டபொழுது மேலும் போர்வையை ஈர்த்து மூடிப் படுத்தாளே யொழிய எழுந்திருக்கவில்லை பிறகு, வீதியில் "மானே! நீ நென்னலை நாளைவந் துங்களை நானே எழுப்புவன் என்றலும் நாணாமே போனதிசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ? என்று எழுந்த ஓசை இவள் காதில் பட்டபொழுதுதான் திடீரெனக் கனவு கண்டு எழுந்ததுபோல் எழுந்தாள். வெளிச்சத்தைக்கண்டு வெட்கினாள் பிறகு வெகு விரைவில் வீட்டு வேலைகளைச் செய்து தன் கடன்களைச் செவ்விதின் முடித்துக் கணவனைப் புன் முறுவலோடு நோக்கி, "தாங்கள் பிறந்த நாள் இன்றல்லவா?" என்றாள்; பாண்டியன் 'ஆம்' என்றான்.

சந்திரா, 'அப்படியானால், இனிமேல் தாங்கள் ஒரு மிடுக்காகவே நடப்பீர்கள்' என்றாள்; அவள் அப்படிக் கேட்டது அவனைப் பரிகசிப்பது போல் அவனுக்குப் பட்டது. அதனால், பாண்டியனும் 'அது என்?' என்று சற்று மிடுக்காகவே கேட்டான். மீண்டுஞ் சந்திரா, 'முப்பதில் மிடுக்குத் தானே!' என்றாள். பாண்டியன் 'முப்பதில் மிடுக்கா? எனக்கு முப்பது ஆரம்பமாகிவிட்டதா?' எனச் சற்றுத் தயக்கமாகக் கேட்-

(வரும்)

# பணித் துறை

## உங்களுக்கு.....

(நாராயணசாமி)

நீங்கள்தான் இந்தத் துயர் நிரம்பிய கடிதம் எழுத மூல காரணமாகின்றீர்கள் என்று அறிந்தபின்னும் நான் ஏன் தயங்கவேண்டும்? அச்சம் எதற்கு? உள்ளத்திலுள்ளதை உங்களிடம் கொட்டி என் வேதனைப் புண்ணை ஆற்றிக்கொள்ள முயல்கிறேன்.

மன ஆழத்திலே புதைந்து கிடக்கும் சம்பவங்கள் குத்திக் கிளப்பப்பட்டுவிட்டதால் அவைகள் உள்ளத்தில் உலவ இடமில்லாமல் தவிக்கின்றன. ஒரு போக்கிடம் கிடைத்தாலொழிய வேறு வழியில்லை. எனவேதான் உங்களுக்கு எழுதுகிறேன்.

சோகம் நிரம்பிய என் வாழ்க்கையில் என்றாவது ஒரு நாள் விடிவெள்ளி தோன்றித் துயர் களையாதோ என்று ஏங்கிக் கிடக்கின்றேன். ஆனால், ஒரு நாளும் கண்டிலேன். காத்துக் காத்து என் மனம் வெறுத்துப்போய் உடைந்த உள்ளத்துடன் உலவுகின்றேன். இனியும் என் வாழ்நாள் முடிவிற்குள் காண்பதென்னவோ ஐயம். ஆனால் எனக்குப் பின் என் சந்ததிகளாவது துயர் படாது வாழ வழி பிறக்காதா என்று கருதியே இதை உங்களுக்கு எழுதுகிறேன்.

ஏன் உங்களுக்கு எழுதவேண்டும்? என்ன அந்தத் துயர் நிரம்பிய செய்தி? என்பதையும் கூறிவிடுகிறேன்.

உலகம் நாளுக்கு நாள் விழித்துக் கொண்டே போகிறது. அறிவுக் கதிரவன் ஒளி பரப்பிக் கொண்டே வருகிறான். அப்படியிருக்க நாங்கள் ஏன் இன்னும் உறங்கவேண்டும்.

கதிரவன் உதயத்திலேயே எழுந்து தயாராகிக்கொண்ட உங்களைப் பார்த்த நாங்கள் அக்கதிரவன் தோன்றிய பின்னாவது எழக்கூடாதா? நீங்கள் எங்களைத் தட்டி எழுப்பாவிட்டாலும் நாங்களே எழுந்து 'எங்களை ஏன் எழுப்பவில்லை' என்று கேட்கும் நிலைமைக்கு வந்துவிட்டோம். எனவே, நாங்கள் உறங்கிய காலம்வரை பறிகொடுத்த கடமைகளையும் உரிமைகளையும் தாருங்கள். விரும்பித்தான் உங்களுக்குத் துணிந்து கடிதம் எழுதுகிறேன்.

இனி, செய்தி என்னவென்று கூறுகிறேன்.

மனிதனை மனிதனாகவே கருதி நடத்தவேண்டும், உறவு கொள்ளவேண்டும். இதைத்தான் (சமூகம்) நீங்கள் செய்யத் தவறிவிட்டீர்கள். எனவே, நான் கூறுவதென்னவென்றால் சேற்றிலே அழுந்திக் கிடக்கும் இலட்சோபலட்சம் பாமர மக்களாகிய தாழ்த்தப்பட்ட இனத்தைக் கரைசேர்த்து அவர்கள் உடலிலும் உள்ளத்திலும் ஒட்டிக்கொண்டிருக்கும் சேற்றைத் துடைக்க உதவுங்கள். அழுந்திய சேற்றிலிருந்துகொண்டே அழுகொழுகும் சோலை கண்டு அபயக் குரலெழுப்புவதைக் கேளுங்கள்.

எண்ணவும், சொல்லவும், செய்யவும் துணிவு இன்றிக் கட்டுக்குள் அடங்கிக் கண் மூடிகளாய்க் கிடப்பதைப் பாருங்கள். 'அடிமை அடிமை' என்று அலறும் அபயக் குரலைக் கேளுங்கள்; உழைத்து உழைத்து உருக்குலையும் நிலையை உன்னுங்கள்; அறிவிலிகளாய், அனாதைகளாய்; அடிமைகளாய் அவர்கள் அல்லல் படுவது இந்த நாட்டுக்குத்தானே இழிவு; ஒரு சமூகத்துக்கு மற்றொரு சமூகம் அடிமை என்ற தாழ்ந்த மனப்பான்மை கொண்ட இந்த நாடு முன்னேறுவது கடினந்தான். நீங்களே எண்ணிப் பாருங்கள்.

பொங்கற் புதுநாளில் புத்தாடை புனைந்து பொலிவுடனிலங்கும் உங்கள் குழந்தைகளைக் கண்டு உள்ளம் குளிருங்கள். உச்சி மோந்து உணர்வு பொங்கச் சித்தம் மகிழுங்கள்.

ஆனால், அதே நேரத்தில் உடம்பெல்லாம் அழுக்கேறி அநாகரிகமாய் அரைவயிற்றுக் கூழுக்கும் அல்லற்படும் மக்களைப் பாருங்கள், நினைவு கூருங்கள்.

கள்ளங்கபடின்றிப் பள்ளிப்படியேறும் உங்கள் பாலர்களைப் பார்த்துப் பரவசமடையுங்கள்; அதேநேரத்தில், மூதிராத உடல் பிழையாத உள்ளமுடைக் குழந்தைகள் வயலிலோ, காட்டிலோ, தெருவிலோ மாடு மேய்த்துக் கொண்டும் பிச்சை எடுத்துக் கொண்டும் கிடப்பதைப் பாருங்கள்.

அஞ்சிய சுபாவமும், மருண்ட பார்வையும், துணிவற்றுத் தாழ்வுச் சிக்கலில் அகப்பட்டுத் தவிக்கும் அவர்கள் முன்னேற வழி செய்யுங்கள். வாலிபர்களும், வனிதையர்களும், தங்களின் இன்ப வாழ்க்கையை அர்ப்பணம் செய்து, உழைத்துழைத்து ஓடாய்த் தேய்வதைக் கண்டாவது, அவர்களின் நல்வாழ்வுக்கு வழிகோலுங்கள். உலக வாழ்க்கையில் நுகரவேண்டிய இன்பங்களை விட்டுச், செய்யவேண்டிய காரியங்களையும் விட்டுப் பசி பசியென்று ஓயாது வயிறு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அதற்கும் அல்லல்படும் மக்களிடம் இரக்கம் காட்டுங்கள். அறிவுப் பஞ்சமும், அருள் பஞ்சமுமற்று அநாசாரம் மிக்க வாழ்வும் வாழ்வாமோ?

அறிஞர்கள் தோன்றிய நாட்டிலுள்ள இந்த அவக்கேடான நிலையைப் போக்கி உயர்ந்தோர் வாழும்நாடாய்த் தக்கார் [illegible]வும் நாடாய்ச் செய்யுங்கள்.

# தமிழாட்சி காண்போம்!

1. தாலாட்டிப் பாலூட்டித் தாயூட்டு மொழிதான்
தாய்நாட்டு வேட்கைமுதல் தன்னாட்சி முதலாம்
மேலோட்டு நாட்டங்கள் மிகவூட்டி ஊட்டி
மேன்மேலு மாந்தர்களை விலங்கு நிலை நீக்கி
நூல்காட்டு நெறிகாட்டி நுண்ணுணர்வை யெல்லாம்
நோன்மையுற நுவல்மாட்சித் திறங்கூட்டிப் பலவாம்
மால்காட்டும் வழிசென்று பிளவுற்ற மைந்தர்
மனங்கூட்டி நல்வாழ்வு காட்டிமகிழ் ஊட்டும்!

2. தாய்மொழியில் இல்லாத தன்னாட்சி எங்கும்
தக்கபடி மன்பதையை உயர்த்திடலும் உண்டோ?
'தாய்மொழியே மாந்தர்களின் தனிமாட்சிக் கெல்லாம்
தக்கவடிப் படை' இதனை மறுப்பாரும் உண்டோ!
தாய்மொழியில் மாநிலங்கள் தகுதியுடன் இயங்கத்
தகுமிணக்க முறைகளையும் அவற்றுக்குள் செய்தால்
தாய்மொழியின் ஆட்சிகளித் தனிக்கண்டந் தனக்குத்
தாரணியில் உண்மைநிலை தனிவலிவு தருமே!

3. மொழியுலகில் பழமையுடன் புதுமைநலம் பலவும்
மொய்ம்புமிகப் பெற்றிரண்டு வழக்குமுடைத் தாகி
வழிவழியில் செழித்துநல வாம்புமுறை வாய்ந்து
வான்பொரு ளிலக்கணநல் லிலக்கியமு மார்ந்து
செழிதருநல் இயலிசையும் நாடகமும் சேர்ந்து
செய்யதிருக் குறள்மறையை உலகமுழு தொப்பத்
தழுவுமுறை தந்துயர்த னிச்செம்மொ ழிக்குள்
தலைமையுறு நம்இனிய தமிழாட்சி காண்போம்!

—தமிழ்ச் சிறுவன்.

---

புன்மை போகட்டும், புத்துலகமையட்டும், வறுமை யொழியட்டும், வண்மை ஓங்கட்டும், சிறுமை யொழியட்டும், செழுமை பெருகட்டும், அருள் சிறக்கட்டும், அனைவரும் ஒன்றென வாழ்வோம்.

இதைத்தான் நான் உங்களுக்கு எழுதுகின்றேன். இதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் உயர வழி பிறந்தால் அது என் பாக்கியமே; என் மனத் துயரெல்லாம் ஒழிந்ததாக எண்ணுவேன்; இறைவன் அருள் புரியட்டும்.

இப்படிக்கு,
தாழ்த்தப்பட்ட இனத்தின்
ஓர் உறுப்பினன்.

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. சு. பா[illegible]ங்கரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்:)